முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 63/2022

இன்று 2025 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 12 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமானந்தம் | தொழில் | : | போதகர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆபேல் | கிராமம் | : | தொட்டிபாளையம் |
| வயது | : | 62 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 12-11-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. தாவாச் சொத்து ஏ.ஜி.சபைக்கு சேர்ந்தது என்றால் ஆபேல் ஏ.ஜி சபைக்கு சேர்ந்தது. ஆபேல் ஏ.ஜி என தனியாக ஒரு சபை இருக்கிறது என்பதற்கு பதிவுச் சான்று உள்ளதா என்றால் இல்லை. ஏ.ஜி சபைக்கு போதகராக 14ம் பிரதிவாதியை நியமனம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. என் அனுமதியில்லாமல் நியமித்து உள்ளார்கள். என் அனுமதி பெற்று தான் திருச்சபைக்கு 14ம் பிரதிவாதியை போதகராக நியமனம் செய்யவேண்டும் என்பதற்கு விதி எதுவும் இருக்கிறதா என்றால் நான் 30 ஆண்டுகளாக சபையின் போதகராக இருந்ததால் சொல்கிறேன்.

2. நான் திருச்சபையில் ஒரு விசுவாசியாக சபையின் ஆராதனையில் கலந்து கொள்ளவும், பிரார்த்தனை செய்யவும் அனுமதி வேண்டி தாவா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 7 முதல் 12 பிரதிவாதிகள் விசுவாசிகளாக ஆராதனையில் கலந்து கொள்வார்கள் என்றால் சரிதான். நான் சபையின் ஆராதனையில் கலந்து கொள்ள அனுமதி கேட்டு இருக்கிறேனா என்றால் இல்லை. சபையில் ஆராதனை நடத்த அனுமதி கேட்டு தாவா தாக்கல் செய்துள்ளேன்.

3. தாவாவில் 1 முதல் 5 பிரதிவாதிகளை கட்சி சேர்க்க வேண்டிய அவசியம் என்ன என்றால் அவர்கள் என்னை அழைத்து விசாரிக்கவில்லை. ஏ.ஜி சபையின்

தலைமையிடம் எங்குள்ளது என்றால் மதுரையில் உள்ளது. 1ம் பிரதிவாதி தான் கண்காணிப்பாளர் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகளை ஏ.ஜி. தலைமை இடத்தின் நிர்வாகிகள் என்ற முறையில் கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். ஆபேல் ஏ.ஜி. சபையின் தலைமை அலுவலகம் எங்கு உள்ளது என தாவாவில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன்.

4. தாவா ஏ.ஜி.சபையின் தலைமை மத போதகர் என்ற முறையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 5 பிரதிவாதிகள் நியமிக்கும் நபர் தான் சபையின் போதகராக ஆராதனையை நடத்த முடியும் என்றால் சரியல்ல. தாவாவில் நான் கோரி உள்ள பரிகாரமும், நான் அளிக்கும் சாட்சியமும் எதிர்மறையாக உள்ளதால் தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.11.12 16:49:42 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.